பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 06 2024 **WEDNESDAY** **6.30 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அனல்மின் நிலையங்களுக்கு தேவைப்படும் நிலக்கரி இதுவரை இல்லாத அளவிற்கு கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. மத்திய பட்ஜெட் தொடர்பாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் பொருளாதார நிபுணர்களுடன் இன்று புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்டார்.

3. இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

4. தமிழகத்தில் கள்ளச்சாராயத்தை ஒழிக்க திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று அஇஅதிமுக, பிஜேபி மற்றும் பாமக குற்றம் சாட்டியுள்ளன.

5. உலகக்கோப்பை வில்வித்தை போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் -*

<<<<<<>>>>>

அனல்மின் நிலையங்களுக்கு தேவைப்படும் நிலக்கரி இதுவரை இல்லாத அளவிற்கு கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

தற்போது நான்கரை கோடி மெட்ரிக் டன் நிலக்கரி கையிருப்பில் உள்ளதாக நிலக்கரித்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நிலக்கரி உற்பத்தியை அதிகரித்தது, சீரான விநியோகத்தை உறுதி செய்தது போன்றவையே இதற்கு காரணம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

பட்ஜெட்டுக்கு முந்தைய கலந்தாலோசனையின் ஒரு பகுதியாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுதில்லியில் பொருளாதார நிபுணர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி மற்றும் உயரதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

கடல்சார் உணவுப்பொருட்களின் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 60 ஆயிரத்து 523 கோடி ரூபாயை எட்டியதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இது அதற்கு முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், இரண்டு புள்ளி ஆறு ஏழு சதவீதம் அதிகமாகும் என்று தொழில் மற்றும் வர்த்தகத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

நாட்டின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உணவு அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்திய உணவு கழகத்தின் தலைமையகத்தில் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கு கூடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கருக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த நான்கு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று சிறைபிடிக்கப்பட்டதை அக்கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் தற்போது 15 மீனவர்களும், 162 மீன்பிடி படகுகளும் உள்ளதாக திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன் கூறியுள்ளார்.

இன்று செங்கல்பட்டு மாவட்டம் கோவளத்தில் பள்ளி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் கள்ளச்சாராய விற்பனையை தடுக்க திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று அஇஅதிமுக, பிஜேபி மற்றும் பாமக குற்றம் சாட்டியுள்ளன.

இதுதொடர்பாக, அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி விடுத்துள்ள அறிக்கையில், கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரம் பகுதியில் கள்ளச்சாராயம் அருந்தி ஐந்து பேர் உயிரிழந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கள்ளச்சாராயத்தை ஒழிக்க திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில், கள்ளச்சாராய சம்பவத்தில் தொடர்புடைய அமைச்சர்கள் மீது முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வெளியிட்டுள்ள அறிக்கையில், மதுவையும், கள்ளச்சாராயத்தையும் கட்டுப்படுத்த தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குறை கூறியுள்ளார்.

இந்த உயிரிழப்புகளுக்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்க வேண்டும் என்றும் திரு ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் திரு அன்னியூர் சிவா இன்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் பாமக வேட்பாளர் திரு சி. அன்புமணியும் இன்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

<<<<<<>>>>>

சர்வதேச யோகா தினம் நாளை மறுநாள் கொண்டாடப்படுவதையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

வெளிநாடுகளிலும், இந்திய தூதரகங்கள் யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன.

உடல் மற்றும் மனநலனை சீராக பராமரிக்க யோகா பயிற்சி உதவிடும் என்று சென்னை பழைய வண்ணாரப்பேட்டையை சேர்ந்த யோகா பயிற்சியாளர் யோகேஷ்வரி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் இதனை தெரிவித்த அவர், சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறினார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆய்வு செய்த ஆட்சியர் திரு பிரபுசங்கர், அவற்றை விரைந்து நிறைவேற்றுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

--------------------

திருப்பத்தூர் மாவட்டம் கொத்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஆட்சியர் திரு தர்பகராஜ் இன்று கள ஆய்வு மேற்கொண்டார்.

----------------------

பெரம்பலூர் மாவட்டம் செட்டிக்குளம் ஊராட்சியில், ஆட்சியர் திருமதி கற்பகம் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை இன்று பெற்றுக்கொண்டார்.

-----------------------

அரியலூர் மாவட்டத்தில் திருநங்கைகள் வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டையில் திருத்தம், மருத்துவ காப்பீட்டுத் திட்டம் போன்றவற்றை பெறுவதற்கான சிறப்பு முகாம் நாளை மறுநாள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

----------------

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில், லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

-------------------

சிவகங்கை மாவட்டத்தில் கோடை மழையை பயன்படுத்தி விவசாயிகள் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்ய வேண்டும் என்று ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் கேட்டுக்கொண்டுள்ளார்.

-------------

தருமபுரி மாவட்டம் மொரப்பூர் காவல்நிலையத்தில் ஆட்சியர் திருமதி சாந்தி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

----------------

சென்னையில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நாளை மறுநாள் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி ராஷ்மி சித்தார்த் ஜக்டே கூறியுள்ளார்.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது

துருக்கியின் **Antalya**–வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், மகளிர் குழு பிரிவில் இந்தியா 234-க்கு 227 என்ற புள்ளிக்கணக்கில் சீனாவை வென்றது.

---------------

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 326 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்துவரும் தென்னாப்பிரிக்கா சற்றுமுன்வரை 19 புள்ளி மூன்று ஓவரில், 3 விக்கெட் இழப்பிற்கு 93 ரன் எடுத்துள்ளது.

பெங்களுருவில் நடைபெற்றுவரும் இப்போட்டிடயில் டாஸ் வென்ற தென்னாப்பரிக்கா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 325 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக ஸ்மிருதி மந்தனா 136 ரன் எடுத்தார். ஹர்மன்பிரீத் கவுர் அதிரடியாக ஆடி 88 பந்துகளில், 103 ரன் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

----------------------

**Armenia** –வில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் **Arjun Erigaisi** பட்டம் வென்றார்.

----------------

**Kaohsiung** மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Meiraba Luwang Maisnam** ஆடவர் ஒற்றையர் பிரிவிலும், **Rakshitha Sree** மகளிர் ஒற்றையர் பிரிவிலும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<END>>>>>**